TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 154 இன் கீழ்)~~

under Section 173 BNSS.

C 8129301

1. District மாவட்டம் : **Tenkasi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti-Corruption Tenkasi** Year: ஆண்டு **2024** FIR No.: மு.த.அ. எண் **12/2024** Date: நாள் **30.09.2024**

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: **PC Act 1988 as Amended in Act 16 of 2018** Sections பிரிவுகள்: **7**

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் **30.09.2024** | Date to : நாள் வரை

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் **11.45 hrs** | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **30.09.2024** Time : நேரம் **18.00 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **30.09.2024** Time : நேரம் **18.30 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Written**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி **Complainant land, South Chatram, Rayagiri Taluk, 50 Km North**

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **S.Vandikara Marimuthu**

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **Tr.Sivan**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **1960**

(d) Nationality : நாட்டினம் **Indian**

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் **Farmer**

(g) Address : முகவரி **64 Mangammal Salai street, South Chatram, Sivagiri Taluk, Tenkasi Dist.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1) Tr.Muthukumar, Assistant Executive Engineer, O/o the AEE, Sivagiri TANGEDCO, Tenkasi District.**

**2) Tr.Maruthupandi, Foreman, O/o the AE, Sivagiri, TANGEDCO, Tenkasi District.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**No Delay**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

**Not arise**

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கிறேன். இன்று 30.09.2024 ஆம் தேதி மாலை 18.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் M.பால்சுதர் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது தென்காசி மாவட்டம், சிவகிரி தாலுகா, தெற்குசத்திரம் கிராமத்தை சேர்ந்த திரு.சி.வண்டிகாரமாரிமுத்து என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட தென்காசி மாவட்டம், சிவகிரி மின்வாரிய உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில், உதவி செயற்பொறியாளராக பணிபுரியும் திரு.முத்துகுமார், மற்றும் சிவகிரி மின்வாரிய உதவி பொறியாளர் அலுவலகத்தில் போர்மேனாக பணிபுரியும் திரு.மருதுபாண்டி பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு வடக்கு சரகம், பொறுப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 30.09.2024 ஆம் தேதி மாலை 18.30 மணிக்கு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

சி.வண்டிகாரமாரிமுத்து
30.9.2024

(signature) 30/9/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும் **30.09.2024 at 19.30 hrs**

Name: பெயர் ........ **M.PAUL SUTHER**
Rank: நிலை ........ **Deputy Supdt. of Police, V&AC, Tenkasi.**

தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2024 u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended in Act 16 of 2018 என வழக்கு பதிவு செய்தேன். அனுப்புநர் சி.வண்டிகார மாரிமுத்து, த/பெ.சிவன், க.எண்.64, மங்கம்மாள் தெற்குசத்திரம், சிவகிரி தாலுகா, தென்காசி மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்சஒழிப்புதுறை, தென்காசி. அய்யா, நான் சிவகிரி தாலுகா, தெற்கு சத்திரம் கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு ஒரு மகள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். மகளை திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். மகன் பேச்சியப்பன் நாமக்கல்லில் உள்ள ஒரு வங்கியில் பணிபுரிந்து வருகிறான். எனக்கு பூர்வீக சொத்து ராயகிரி கிராம பகுதி-1 கிராம சர்வே எண்.883/4பி-ல், 46 செண்ட் நஞ்சை நிலம் உள்ளது. எனக்கு வயதாகிவிட்டதால் கடந்த 2020 ஆம் ஆண்டு மேற்படி நிலத்தினை சிவகிரி சார்பதிவாளர் அலுவலகத்தில் தானசெட்டில்மெண்ட் ஆவண எண்.96/2020-ன்படி எனது மகன் பேச்சியப்பனுக்கு பதிவு செய்து கொடுத்து விட்டேன். மேற்படி இடம் குளத்து பாசனம் என்பதால் தண்ணீர் வசதிக்காக போர்வெல் போட்டோம். அதிலிருந்து மோட்டார் வைத்து தண்ணீர் எடுப்பதற்கு மின் இணைப்பு தேவைப்பட்டது. எனவே மின் இணைப்பு பெறுவதற்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்பதற்காக சுமார் பத்து நாட்களுக்கு முன்பு சிவகிரி உதவி பொறியாளர் அலுவலகத்திற்கு சென்றபோது அங்கிருந்த ஒரு நபர், சிவகிரி ஊருக்குள் இருக்கும் AD அலுவலகத்திற்கு சென்று AD-யை பார்க்க சொன்னர். அதன்பேரில் நான் AD-முத்துகுமாரை அவரது அலுவலகத்தில் வைத்து பார்த்து விபரம் கேட்டபோது நாளைக்கு இடத்தை பார்த்துவிட்டு சொல்வதாக கூறினார். மறுநாள் எங்கள் ஊரில் வைத்து AD-முத்துகுமார் அவர்கள் போர்மேன் மருதுபாண்டியுடன் எனது நிலத்தை பார்த்துவிட்டு, விவசாயத்திற்கு என குறைந்த கட்டணத்தில் மின்இணைப்பு பெற ஆன்லைனில் விண்ணப்பியுங்கள், உங்களுக்கு போர்மேன் உதவி செய்வார் என்று சொன்னார். அதன்பேரில் 23.09.2024 ஆம் தேதி மதியம் போர்மேன் மருதுபாண்டி என்னிடம் பத்திரம் மற்றும் ஆவணங்களை பெற்று சிவகிரியில் உள்ள இ-சேவை மையத்தில் வைத்து ஆன்லைனில் விண்ணப்பம் செய்துவிட்டு, மனுவின் ஒரு நகலையும் எனது மகனிடம் கையெழுத்து வாங்க வேண்டும் என்று கூறி சில ஆவணங்களையும் என்னிடம் கொடுத்தார். நான் அதை எனது மகனுக்கு கொரியரில் அனுப்பி, கையெழுத்து பெற்று வாங்கி வைத்தேன். இன்று 30.09.2024 ஆம் தேதி பகல் சுமார் 11.25 மணிக்கு போர்மேன் மருதுபாண்டி எனது செல்போனில் தொடர்பு கொண்டு உங்களது மகனிடம் ஆவணங்களில் கையெழுத்து வாங்கிவிட்டீர்களா என்று கேட்டுவிட்டு, எனது நிலத்திற்கு வரச்சொன்னார். அதன்பேரில்

சுமார்11.45 மணிக்கு AD-முத்துகுமார் அவர்கள் போர்மேன் மருதுபாண்டியுடன் அவரது இருசக்கர வாகனத்தில் எனது நிலத்திற்கு வந்தார். எனது மகனிடம் கையெழுத்து வாங்கிய ஆவணங்களை AD-முத்துகுமார் வாங்கி பார்த்துவிட்டு, மின்இணைப்பு பெறுதற்கு கட்டணமாக ரூ.16,499 கொடுத்து விடுங்கள் என்றும் மின்இணைப்பு கொடுப்பதற்கு எனக்கும், போர்மேனுக்கு சேர்த்து தனியாக ரூ.35,000- கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டதற்கு அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணம் போக ரூ.5,000- முதலில் நாளைக்கு கொடுங்கள். அப்புறம் மீட்டர் மாட்டி மின் இணைப்பு கொடுக்கும் போது ரூ.30,000-ஐ கொடுக்க வேண்டும் என்று AD-முத்துகுமார் கறாறாக சொல்லிவிட்டார். போர்மேன் மருதுபாண்டியிடம் கேட்டபோது AD-சொல்வதுபோல பணத்தை தயார் செய்துவிட்டு நாளைக்கு AD-அலுவலகத்திற்கு வாருங்கள் என்று சொல்லிவிட்டார். நானும் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து நான் யோசித்து பார்த்தபொழுது சட்டப்படியாக செய்ய வேண்டிய அரசு பணிக்கு அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்திற்கு மேல் கூடுதலாக அவர்களுக்கு லஞ்சமாக ரூபாய் 35,000/-ம், அதில் முதல் தவணையாக நாளைக்கு ரூ.5,000-ம் கொடுக்க விருப்பம் இல்லை. என்னிடம் மின் இணைப்பு கொடுப்பதற்கு லஞ்சம் கேட்ட சிவகிரி யுனு முத்துகுமார், மற்றும் போர்மேன் திரு.மருதுபாண்டி இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.. இப்படிக்கு (sd சி.வண்டிகார மாரிமுத்து)

Sir, Received the Petition on 30.09.2024 at 18.00 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Northen Range, i/c. Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.12/2024 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 30.09.2024 at 19.30 hrs. sd.M.PAUL SUTHER, Deputy Superintendent of Police, V&AC, Tenkasi.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

30/9/2024
M. PAUL SUTHER.
DSP. V&AC.
Tenkasi.